# பாடம் 3 - யானைக்கும் பானைக்கும் சரி

**வகுப்பு : IV**

**பாடம் : தமிழ்**

**அ. வினாக்களுக்கு விடையளிக்க**

**1. உழவர் யானையை எதற்காக இரவல் கேட்டார்?**

உழவர், தம் மகன் திருமண விழாவில் ஊர்வலம் விடுவதற்காக யானையை இரவல் கேட்டார்.

**2. ஊர்வலம் சென்ற யானைக்கு என்ன நேர்ந்தது?**

ஊர்வலம் சென்ற யானை இறந்துவிட்டது.

**3. மரியாதை இராமன் உழவரைத் தனியே அழைத்து என்ன கூறினார்?**

- மரியாதை இராமன் உழவரை தனியாக அழைத்து "நாளை நீங்களாகவே நீதிமன்றத்திற்கு வரவேண்டாம். அந்த வணிகரை உங்கள் வீட்டிற்கு அனுப்புகிறேன்.
- அவர் வரும்போது உங்கள் வீட்டுக் கதவிற்குப் பின் பழைய பானைகளை அடுக்கி வைத்து, கதவைத் தாழ்ப்பாள் போடாமல் வைத்திருங்கள். பின்னர், நடப்பதை நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறினார்.

**4. யானைக்கும் பானைக்கும் சரி என்ற கதை உணர்த்தும் நீதி என்ன?**

ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு

**ஆ. பூக்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. வணிகர் <u>அரபு</u> நாட்டைச் சேர்ந்த வர்.
2. உழவர், வணிகர் இருவரின் வழக்கை எதிர்கொண்டவர் <u>மரியாதை ராமன்</u>
3. திருமண ஊர்வலத்தில் <u>யானை</u> இறந்து விட்டது.
4. பழைய <u>பானைகள்</u> கீழே விழுந்து நொறுங்கின.



## இ. சொற்களை முறைப்படுத்தி சரியான தொடரமைத்து எழுதுக.




1. மரியாதை இராமன் விசித்திரமான வழக்கை எதிர்கொண்டார்.
2. ஊர்வலத்தில் யானை தற்செயலாக இறந்துவிட்டது.
3. கதவின் பின்னால் பானைகள் அடுக்கி வைக்கப்பட்டன.
4. பானைகள் கீழே விழுந்து உடைந்து விட்டன.

## ஈ. குறிப்புகளைப் பயன்படுத்திக் கதை உருவாக்குக. பொருத்தமான தலைப்பிடுக.

நான்கு எருதுகள் - ஒற்றுமையாக வாழ்தல் - சிங்கம் - பிரிக்க நினைத்தல் - எருதுகள் எதிர்த்தல் - சிங்கத்தின் சூழ்ச்சி - எருதுகள் பிரிதல் - சிங்கம் வேட்டையாடுதல்.

### ஒற்றுமையே பலம்

ஒரு காட்டில் நான்கு எருதுகள் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தன. அவை நான்கும் வலிமையுடன் இருந்தன. அக்காட்டில் வாழ்ந்த சிங்கம் இவர்களின் ஒற்றுமையைப் பார்த்து, எப்படியாவது இவைகளைப் பிரித்துவிட வேண்டும் என்று எண்ணியது. முதலில் ஒரு எருதைக் கொல்லலாம் என்று சிங்கம் சீறிப் பாய்ந்தது. ஆனால் மற்ற எருதுகள் சேர்ந்து சிங்கத்தைத் தம் கொம்புகளால் குத்தித் தாக்கின.

வலியால் துன்புற்ற சிங்கத்திடம் நரி வந்து பேசியது. தந்திரமாக எப்படியாவது நான்கு எருதுகளையும் பிரிப்பதாகக் நரி கூறியது. அதேபோல் ஓர் எருதிடம் சென்று “உன் வலிமையால்தான் சிங்கம் பயந்து ஓடியது.மற்ற எருதுகளால் இல்லை ” என்று கூறியது. இதேபோல் ஒவ்வொரு எருதிடமும் கூறியது. எருதுகள் ஒன்றுக்கொன்று சண்டையிட்டுப் பிரிந்தன. அச்சமயம் பார்த்து சிங்கம் ஒவ்வொரு எருதாய்க் கொன்றது. எருதுகள் ஒற்றுமையாய் இல்லாததால் கொல்லப்பட்டன.

## உ. குறிப்புகளைக் கொண்டு கட்டத்திலிருந்து விடை காண்போமா?

| | | | |
|---|---|---|---|
| | 1. ப | ழை | ய |
| 4. உ | ண் | 3. யா | னை |
| ழ | 2. க | | |
| வ | த | | |
| ர் | வு | | |

இடமிருந்து வலம்

1. பழைமை என்பது இதன் பொருள் - பழைய
2. வீட்டின் முகப்பில் உள்ளது - கதவு
3. தும்பிக்கை உள்ள விலங்கு - யானை

மேலிருந்து கீழ்

2. உடலின் ஓர் உறுப்பு - கண்
4. வேளாண் தொழில் செய்பவர் - உழவர்

AKSHAYA ACADEMY MATRIC. Hr. Sec. SCHOOL
KOSAVAPATTY
KNOWLEDGE IS POWER